மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம்: நடனம் - பரதம்

வாரம் - 13

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியை S. சானு பிரியதரஷனி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

## பகுதி 1

**சரியான விடையை தெரிவு செய்க**

1). அல்லியம் யாரால் ஆடப்பட்டது?
1) திருமால் 2) பிரம்மா 3) உமை 4) பாரதி 5) சிவன்.

2). சங்ககாலத்தில் மன்னரும் கற்றறிந்தோரும் இருந்த அவையில் ஆடும் கூத்து
1) நாட்டுக்கூத்து 2) காமன்கூத்து 3) வேத்தியல் 4) வசந்தன் 5)பொதுவியல்

3). நாட்டிய சாஸ்த்திரம் கூறும் கரணங்கள் எத்தனை?
1) 18 2) 28 3) 108 4) 101 5) 68.

4). குறிஞ்சிநில மக்கள் தங்கள் நிலத்தில் நடைபெற்ற உயரிய செயலுக்கு முருகனை வாழ்த்தி ஆடுவது
1) குன்றக்குரவை 2) குரவை 3) வரி 4) கூத்து 5) கோலம்.

5). ஒருமுக எழினி எனப்படுவது?
1) வலத்தூண் 2) பொதுத்தூண் 3) இடத்தூண் 4) ஒற்றைத்தூண் 5) தூண்

6). குரவை, துணங்கை, வெறியாடல் எனும் ஆடல்கள் காணப்படும் இலக்கியம்?
1) சங்க இலக்கியம் 2) சங்கமருவிய இலக்கியம் 3) பல்லவ இலக்கியம் 4) கவிதை 5) வரிப்பாடல்

7). சங்கமருவிய கால ஆடற்கலையின் மகுடமாக அமைவது?
1) துணங்கை 2) சிலப்பதிகாரம் 3) பட்டினப்பாலை 4) பாண்டுரங்கம் 5) முருகாற்றுப்படை

8). சங்ககால இலக்கியங்களில் வெற்றியின் காரணமாக எழுவரோ, எண்மரோ, ஒன்பதின்மரோ கூடி நின்று ஆடுவது?
1) குரவை 2) கூத்து 3) வெறியாடல் 4) துணங்கை 5) விறலி

9). தண்ணுமை என்று குறிப்பிடப்படும் இசைக் கருவி?
1) தவில் 2) தபேலா 3) உடுக்கு 4) மிருதங்கம் 5) மத்தளம்.

10). சங்கமருவிய காலத்தில் ஊர்மக்கள் காண என அமைக்கபட்ட அரங்குகள் எவ்வாறழைக்கப்பட்டன?
1) கூத்தம்பலம் 2) ஆடலம்பலம் 3) பரத அம்பலம் 4) அரங்கு 5) எழினி

11) எம்மன்னன் காலத்தில் சைவம் வைணவம் ஆகிய இருசமயங்களும் மீட்டுருவாக்கம் பெற்றன?
1)சிம்ம விஷ்ணு 2) மகேந்திரன் 3)பல்லவ மன்னன் 4) பாண்டியன் 5) விஷ்ணுவர்மன்

12). சங்கமருவிய கால அரங்கத்தின் விதானம் அமைக்கப்படவேண்டிய உயம்?
1) 4 கோல் உயரத்தில் 2) 6 கோல் உயரத்தில் 3) மேடையிலிருந்து 4கோல் உயரத்தில் 4) மேடையிலிருந்து 6கோல் உயரத்தில் 5) 10கோல் உயரத்தில்.

13). பெண்கள் எவ்வாறெல்லாம் தங்களின் காதலை வெளிப்படுத்துவர் என்பதைக் கூறும் நடனம்?
1) குன்றக்குரவை 2) சாக்கையர் குரவை 3) வேட்டுவ வரி 4) வரிகோலம்.

14). சிலப்பதிகாரம் காட்டும் அனைத்து நடனச்செய்திகளும் சுற்றி அமைந்திருந்ததாக கூறப்பட்ட இனம்?
1)குரவை 2)துணங்கை 3) வெறியாடல் 4) கணிகையர் 5)தேவராட்டி

15). சங்க மருவிய காலத்தில் பிண்டி, பிணையல் என முறையாக அழைக்கப்பட்டவை?
1)ஒற்றைக் கை, இரட்டைக் கை, 2) தாண்டவம், லாஸ்சியம்
3) அடவு, கோர்வை 4) இசை, நடனம் 5) மிருதங்கம், வீணை.

பகுதி (II)

1. சங்ககாலத்தின் வேத்தியல், பொதுவியல் இரண்டினையும் விளக்குக.?

2, சங்க காலத்தில் நடனம் எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டது?

3, நடனமாடுவோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

4, சங்க காலத்தின் இலக்கியங்கள் எவை?

5, குரவை, துணங்கை, வெறியாடல் எனும் மூன்று பகுதிகளையும் தனித்தனியே விளக்கியெழுதுக?